# 57

## "பாநயம் கண்டறிதல்" – ஒரு பல்லூடகத் தொகுப்பு

**வி.கணபதி,**

*ஆலோசகர், இந்திய மொழிகளுக்கான தொழில்நுட்பத் தீர்வு வள மையம் தமிழ்,*
*கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பள்ளி, அண்ணா பல்கலைக்கழகம்.*

**டி.வி. கீதா, ரஞ்சனி பார்த்தசாரதி,**

*இந்திய மொழிகளுக்கான தொழில்நுட்பத் தீர்வு வள மையம் தமிழ்,*
*கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பள்ளி, அண்ணா பல்கலைக்கழகம்.*
*<E Mail {tvgeedir@annauniv.edu, rp@annauniv.edu }>*

---

**கட்டுரை சுருக்கம்**

'பாநயம் கண்டறிதல் – ஒரு பல்லூடகத் தொகுப்பு' என்ற இந்தத் தொகுப்பானது இறைவனை, மொழியை, நாட்டை வணங்கும் பகுதியான கடவுள் வாழ்த்து, அறக் கருத்துகளை எடுத்துக் கூறுவதாக அமைந்த அறவுரைப் பகுதி, ஒரு கதையைத் தொடர்ச்சியாகப் பல பாடல்களால் கூறும் தொடர்நிலைச் செய்யுள், குறம், குறவஞ்சி, உலா, பிள்ளைத் தமிழ் போன்ற பல்வகை இலக்கியங் களிலிருந்து பலவகை இலக்கியச் சுவையோடு கூடிய தேர்ந்தெடுக்கப் பெற்ற பாடல்கள் அடங்கிய பல்சுவைப் பகுதி. தீண்டாமை, பெண்கள் விடுதலை, நாட்டுப்பற்று, மக்கள்தொகைக் கல்வி போன்ற சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளை எடுத்துக் கூறும் மறுமலர்ச்சிப் பாடல்கள், பல்சமய கடவுளர்களைப் புகழ்ந்து பாடும் வழிபாட்டுப் பாடல்கள் என்று பகுதிகளை, கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும் இத்தொகுப்பானது பாடல்களுக்கு ஏற்ற இசையோடு பாடப்பெற்றும் ஒலிநயம், எதுகை, மோனை, இயைபுத் தொடை நயம் உணர்த்தியும் உவமை, சிலேடை போன்ற அணிநயம் அறிவுறுத்தியும் சொற்களைப் பிரித்து அறிதல், அருஞ்சொற்களின் பொருள் போன்றவற்றைத் தெளிவுபடுத்தியும் தொகுக்கப்பட்டுள் ளது. பாடல்கள் அனைத்திற்கும் ஒளிக் காட்சிகள் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது.

இத்தொகுப்பு மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியில் எளிய பாடல்கள், இசையமைத்துப் பாடக் கூடியவை, செப்பலோசை, அகவலோசையை அறிமுகப்படுத்தும். இப்பகுதியில் ஐந்து பாடல்கள் அடங்கும்.

இரண்டாம் பகுதி ஒலி நயத்தைப் பாராட்டும் பகுதி. எதுனை, மோனை, இயைபு, வல்லின மெல்லின எழுத்துக்கள் அமைந்த எட்டுப் பாடல்கள் இப்பகுதியில் அடங்கும். மூன்றாம் பகுதி அணிநயம், சொல் நயம், பொருள் நயம் ஆகியவை அமைந்த பன்னிரண்டு பாடல் களைக் கொண்டது.

**அறிமுகம்**

ஒரு மொழியின் இனிமையும் இலக்கியத்தின் வளமையும் இலக்கணத்தின் பெருமையும் அம்மொழியின் சிறப்புக் கூறுகளை வெளிக்காட்டப் பயன்படும் உத்தி முறைகளின் தன்மையைப் பொறுத்தே வெளிப் படுகின்றன. செய்யுள்களும், செய்திகளும் வாய்மொழியாக சொல்லப்பட்ட காலமும், வழிவழியாக வழங்கப்பட்ட காலமும் கடந்து, நூல்களில் நிரம்பிய புரட்சிக் காலமும் போய், இன்று கணினியில் கால் பதித்திருக்கிறது. இந்நிலையில் கொடுக்கின்ற செய்தியினை காண்போரை / படிப்போரைப் பிடிக்கின்ற

வகையில் கொடுப்பதென்பது முக்கியத்துவம் பெறுகிறது. அம்முக்கியத்துவத்தினை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டதே 'பாநயம் கண்டறிதல் – ஒரு பல்லூடகத் தொகுப்பு' என்ற இத் தொகுப்பாகும்.

பல்வகை இலக்கியங்களில் இருந்து பல்வகைப்பட்ட பாடல்களை ஒலி–ஒளி அமைப்போடு இத்தொகுப்பு வழங்குகிறது. பாடல் நயங்களை வெளிக்கொணரும் முகமாகவும், மேலும் பயனாளரின் நினைவாற்றலை மேம்படுத்தும் பொருட்டும் விளையாட்டு முறைப் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இது சிறுவர்களின் ஆர்வத்தினைத் தூண்டுவதோடு அவர்களின் நினைவாற்றலையும், இலக்கிய ஈடுபாட்டையும் வளர்க்க வகை செய்கிறது. இலக்கணப் பகுதிகளின் விதிகள் 'அசைவூட்ட' முறையில் அமைக்கப்பட்டுள்ளதால், இலக்கண விதிகளை மனதில் நிறுத்துவது எளிதாகிறது. ஒவ்வொரு பாடலுக்கும் ஒளிக்காட்சிகளோடு ஒலி வடிவமும் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளதால், பாடலும் கருத்தும் படிப்போர் மனதில் ஆழப் பதிய ஏதுவாகிறது.

ஒரு பகுதியில் இருந்த மற்றொரு பகுதிக்கு செல்ல எளிமையான முறையில் இணைப்புகள் கொடுக்கப்பட்டு பயனாளரின் தடுமாற்றத்தைத் தடை செய்கிறது. இத்தொகுப்பு 'மேக்ரோமீடியா'வின் 'ப்ளாஷ்' என்ற மென்பொருளால் உருவாக்கப்பட்டுள்ளது.

**பாடி மகிழ்வோம்**

ஒரு கருத்தை உரைநடையிலும் பாடல் வடிவிலும் கூறலாம். பாடல் வடிவே மொழியில் முந்தியதாகும். பாடலை இசையோடு சொல்கிறபொழுது கருத்து மனத்தில் நன்கு பதியும். பாடி மகிழ்வோம் என்ற தலைப்பில் இது தொகுக்கப்பட்டுள்ளது. தமிழை இசையோடு கற்பது மிகவும் இனிமை என்பதன் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.



**நூல் உள்ளடக்கங்கள்**

இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களின் தலைப்புகளாவன: மலரும் மாலையும், நீதிநெறி விளக்கம், தனிப்பாடல், குற்றாலக் குறவஞ்சி, பாரதியார் பாடல், திருக்குறள், நீதிவெண்பா, இராமாயணம், கலிங்கத்துப் பரணி, பாரதம், நளவெண்பா, நாலடியார், திவ்யப் பிரபந்தம், மணிமேகலை, பெரிய புராணம், புதுக் கவிதைகள் ஆகியன ஆகும்.

**பாடல் தலைப்புகள்**

இதில் உள்ள தலைப்புகள் மலர்கள், அகம் மகிழ்க, தமிழை என்னுயிர் என்பேன், நாராய் நாராய், குற்றால மலை, இந்நாடு, குறள் இன்பம், கடல் உப்பும் கர்ப்பூரமும், சங்கத் தமிழ் மூன்றும் தா, தமிழ் எமது அமுது, முனியின் கோபம், கலிங்கப் போர், பெண்மையின் மென்மை, கதிரவன் மறைவும் கர்ணன் மறைவும், உள்ளத்து உயர்வு, காதலியைப் பிரிந்த நளன், முதலையின் பலம், திங்களும் சான்றோரும், திருமாலுக்கு சொல்மாலை, அன்பும் வாழ்க்கையும், செவிச் செல்வம், எங்கும் கொடிகள், பெண்ணும் வாழையும், மெய்ப் பொருள் மற்றும் பெரியவை எவை? ஆகியன ஆகும். இவை தவிர மூன்று பயிற்சிப் பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.




ஒவ்வொரு பகுதியிலும் பாடல், சொற்களைப் பிரித்து அறிவோம், இலக்கணம் அறிவோம், அருஞ் சொற்பொருள் அறிவோம், உரைநடைப்படுத்தி அறிவோம், பொழிப்புரை அறிவோம், நயம் அறிவோம், ஆசிரியர்–நூல் பற்றி அறிவோம், தொடர்புடைய பிற செய்தி அறிவோம் மற்றும் பயிற்சி என்று 10 விதமான பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதில் உள்ள பாடல்களும் அதன் பண்புகளும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| **பாடல்கள்** | **பண்புகள்** |
|---|---|
| மலர்கள் | மலர்கள் தங்களைப்பற்றி கூறுதல் |
| அகம் மகிழ்க | நீதி நெறியை விளக்கும் பாடல் |
| தமிழை என் உயிர் என்பேன் | தமிழின் இனிமை கூறும் பாடல் |
| நாராய் நாராய் | புலவர் தம் வறுமையைக் கூறுதல் |
| குற்றால மலை | குறத்தி தன் மலை வளம் கூறுவதாக அமைந்த பாடல் |
| இந்நாடு | பாரத நாட்டைப் போற்றும் பாடல் |
| குறள் இன்பம் | நீதி நெறியை விளக்கும் குறள்கள் |
| கடல்உப்பும் கர்ப்பூரமும் | நீதி நெறியை விளக்கும் பாடல் |
| சங்கத்தமிழ் மூன்றும் தா | முத்தமிழ் வேண்டி ஔவையார் விநாயகரை துதிக்கும் பாடல் |
| தமிழ் எமது அமுது | தமிழின் இனிமை கூறும் பாடல் |
| முனியின் கோபம் | விசுவாமித்திரரின் கோபம் கூறும் கம்பராமாயணப் பாடல் |
| கலிங்கப் போர் | கலிங்கப் போரின் போர்க் காட்சியை விளக்கும் பாடல் |
| பெண்மையின் மென்மை | கம்பராமாயணத்தில் சூர்ப்பனகையை வர்ணிக்கும் பாடல் |
| கதிரவன் மறைவும் கர்ணன் மறைவும் | பாண்டவர் – கௌரவர் கதையைக் கூறும் வில்லிபுத்தூரரார் பாடல் |
| உள்ளத்து உயர்வு | நீதி நெறியை விளக்கும் குறள் |
| காதலியைப்பிரிந்த நளன் | நளனின் வரலாற்றை வெண்பாவில் கூறும் நளவெண்பா பாடல் |
| முதலையின் பலம் | பிறிது மொழிதல் அணியைப் பயன்படுத்தி அமைந்த குறள் |
| திங்களும் சான்றோரும் | நாலடியாரில் உள்ள நீதிப்பாடல் |
| திருமாலுக்குச் சொல்மாலை | திருமாலுக்குப் பாமாலை சூட்டும் நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாடல் |
| அன்பும் வாழ்க்கையும் | அன்புடமை பற்றிய திருக்குறள் பாடல் |
| செவிச்செல்வம் | செவிச்செல்வம் பற்றிய திருக்குறள் பாடல் |
| எங்கும் கொடிகள் | காவிரிபூம்பட்டினத்தில் இந்திரவிழா கொண்டாடப்படும்போது உள்ள மணிமேகலைப் பாடல் |
| பெண்ணும் வாழையும் | வாழையையும் பெண்ணையும் ஒப்பிடும் பாடல் |
| மெய்ப்பொருள் | சிவபெருமானின் கருணை பற்றி கூறும் பெரியபுராணப் பாடல் |
| பெரியவை எவை | நீதிநெறியை விளக்கும் குறள். |

‘‘மலர்கள்’’ பகுதியில் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை எழுதிய மலரும் மாலையும் என்ற பாடல் தொகுப்பிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் மலர்கள் தங்களைப் பற்றிக் கூறுவதாக பாடல் அமைந்துள்ளது. கம்பனுடைய பாடல்களில் உள்ள தமிழ் மணம் போல மலர்கள் தனி மணம் வீசுவதாகப் பாடல் அமைந்துள்ளது. அதன் பொழிப்புரை மற்றும் இலக்கணக் குறிப்புகள் கொடுக்கப் பட்டுள்ளன.

''அகம் மகிழ்க'' என்ற பகுதியில் நீதிநெறி விளக்கம் என்ற நூலிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. தம்மை விடச் செல்வத்தில் குறைந்தவர்களைப் பார்த்து நம் செல்வம் எவ்வளவு பெரியது என்று மனத்திற்குள் நினைத்துக்கொள்ள வேண்டும் என்றும், தம்மை விட மிகுதியாகக் கற்றவரைப் பார்த்து இவருடைய கல்வி அறிவுக்கு முன்னே நாம் கற்றது மிகக் குறைவு என எண்ணவேண்டும் என்றும் இப்பாடல் நீதி கூறுகிறது. இதன் ஆசிரியர் குமரகுருபரர் ஆவார். இது வாழ்வதற்குரிய நீதிகளை, வாழும் முறைமைகளை விளக்கமாகக் கூறுகின்றது.

''தமிழை என் உயிர் என்பேன்" என்ற பகுதியில் பாரதிதாசன் எழுதிய தமிழின் இனிமை என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தமிழின் இனிமை மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. தமிழை உயிருக்கு நிகர் என்று சொல்லும் விதமாக தமிழின் இனிமையை பலாப்பழத்தில் உள்ள பலாச் சுளை, கரும்புச்சாறு, மலரில் உள்ள தேன், பசுவின் பால் இவற்றிற்கு மேலாகக் கூறப்பட்டுள்ளது. இதில் இலக்கணம் மற்றும் உரைநடை விளக்கம் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.

''நாராய் நாராய்'' என்ற தலைப்பில் சத்திமுத்தப் புலவர் எழுதிய தனிப்பாடலிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது புலவர் தம் வறுமையை நாரையிடம் கூறுவது போல மன்னனுக்குத் தெரிவிக்கும் பாடலாக அமைந்துள்ளது. பாடலின் விளக்கம், ஒலி வடிவம், காட்சி அமைப்பு மற்றும் இலக்கண விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

''குற்றால மலை'' என்னும் தலைப்பில் குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலில் குறத்தி தன் மலை வளம் கூறுவதாக அமைந்த ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் குற்றால மலையின் வளம் கூறும் விதமாக அந்த மலையில் குரங்குகள் கனிகளைக் கொடுத்துப் பெண் குரங்குகளுடன் கொஞ்சி விளையாடுகின்றன. காட்டில் உள்ளவர் தங்கள் பார்வையால் தேவரை அழைப்பர். வான்வழியே செல்லும் சித்தர்கள் இம்மலைக்கு வந்து உடலை நிலையாக வைத்திருக்கும் திறன் பெறுவர் என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் திரிகூடராசப்ப கவிராயர் ஆவார்.

''இந்நாடு'' என்ற தலைப்பில் சுப்ரமணிய பாரதியார் எழுதிய கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடல் பாரத நாட்டைப் போற்றும் விதமாகவும் வணக்கம் கூறும் விதமாகவும் அமைந்துள்ளது. தந்தையும் தாயும் மகிழ்ச்சியோடு உரையாடி மகிழ்ந்ததும், முன்னோர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து மறைந்ததுவும் அவர்கள் உள்ளத்தில் வளமான சிந்னைகள் தோன்றி வளர்ந்து சிறந்ததும் இந்தப் பாரத நாடேயாகும் என்று நவில்கிறது இப்பாடல். இந்தப் பாடல் நாட்டு வணக்கம் என்ற தலைப்பின் முதல் பாடலாக உள்ளது.

''குறள் இன்பம்'' என்ற தலைப்பில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து ''நன்றி மறப்பது நன்றன்று..'' என்ற குறளின் விளக்க உரை கொடுக்கப்பட்டுள்ளது. ''சொல்லுக சொல்லில் பயனுடைய...'' என்ற குறளும் விளக்கப்பட்டுள்ளது. இக்குறட்பாக்கள் முறையே செய்நன்றி அறிதல், பயனில சொல்லாமை என்னும் அதிகாரங்களில் உள்ளன. திருக்குறள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஒருவர் செய்த நன்மையை மறந்துவிடுதல் நல்லது அன்று. ஆனால் ஒருவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுதல் நல்லது என்பதை முதல் குறளும் நாம் சொல்லும் சொற்கள் நமக்கும் கேட்பவருக்கும் பயன் தருகின்ற சொற்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறு பயன் தராத சொற்களைச் சொல்லுதல் கூடாது என்பதை இரண்டாம் குறளும் விளக்குகின்றன.

''கடல் உப்பும் கர்ப்பூரமும்'' என்ற தலைப்பில் நீதி வெண்பா என்னும் நூலிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு நீதிப்பாடல் ஆகும். கடலுப்பையும் கர்ப்பூரத்தையும் போல தீவினையாளரும் நல்வினையாளரும் உருவத்தால் ஒத்திருப்பர் ஆனால் தன்மையால் வேறுபடுவர்.

''சங்கத் தமிழ் மூன்றும் தா'' என்ற தலைப்பில் ஔவையார் பாடிய தனிப்பாடல்களில் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. இயல், இசை, நாடகமாகிய முத்தமிழ் வேண்டி விநாயகரிடம் ஔவையார் துதிக்கும் பாடல். பாலும், தேனும், பாகும், பருப்புமிவை நான்கும் கொடுத்து முத்தமிழை வரமாக கேட்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

''தமிழ் எமது அமுது'' என்ற தலைப்பில் பாரதிதாசனின் கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது ''எங்கள் தமிழ்'' என்னும் தலைப்பில் அமைந்த முதல் பாடல் ஆகும். தமிழ் மொழியின் இனிமையைக் கூறும் பாடல். இதில் தமிழ் மொழியை அமிர்தத்திற்கு இணையாகவும்,

கனிச் சாறுக்கும் மேலானது போன்று இனிமை மிக்கது என்றும் நாம் பெற்ற செல்வத்தில் சிறந்த செல்வம் என்றும் பாரதிதாசன் தமிழின் இனிமையை விளக்கியிருக்கிறார்.

''முனியின் கோபம்'' என்ற தலைப்பில் கம்பர் எழுதிய ராமாயணத்திலிருந்து ஒரு பாடல் கொடுக்கப் பட்டுள்ளது. விசுவாமித்ர முனிவரின் கோபம் குறிப்பிடும் பாடலின் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. விசுவாமித்திரர் உலக நன்மைக்காக வேள்வி செய்ய முற்படுகிறார். அரக்கர் அதனைத் தடுக்கின்றனர். அவர்கள் தடுக்காமல் காப்பாற்ற விசுவாமித்திரர் தசரதனிடம் இராமனை அனுப்பும்படி கேட்கிறார். தசரதன், 'இராமன் சிறுவன், நான் வருகிறேன்' என்கிறார். அந்நிலையில் விசுவாமித்திரருக்குக் கோபம் ஏற்படுகிறது.

''கலிங்கப்போர்'' என்ற தலைப்பில் கலிங்கத்துப் பரணியில் உள்ள ஒரு பாடலும் அதன் விளக்க உரையும் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் போர்க் காட்சி ஒன்றை விளக்கும் பாடல் கொடுக்கப்பட் டுள்ளது. இதில் போர்க்காட்சி ஒன்றை விளக்கும் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. குலோத்துங்கச் சோழனின் படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான் கலிங்க மன்னன் அனந்தபதுமனுடன் நடத்திய போர் கலிங்கப் போர். அப்போர்க்களக் காட்சி ஒன்றை வருணிக்கும் பாடல்.

''பெண்மையின் மென்மை'' என்ற பகுதியில் கம்பராமாயணத்திலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள் ளது. இது ராமன் மீது சூர்ப்பனகை காதல் கொண்டு மென்மையான பெண் உருவில் வந்ததை வர்ணிக்கும் பாடல் ஆகும். கோதாவரி நதிக் கரையில் பஞ்சவடி என்னும் இடத்தில் இராமன், இலக்குவன், சீதை ஒர் இருப்பிடம் அமைத்துத் தங்கியிருந்தனர். அப்பொழுது இராமன் மீது காதல் கொண்டு சூர்ப்பநகை வந்தாள். அரக்கியான அவள் மென்மையான பெண்ணுருவில் வந்ததை வருணிக்கும் பாடல்.

''கதிரவன் மறைவும் கர்ணன் மறைவும்'' என்ற தலைப்பில் வில்லிபுத்தூரார் எழுதிய பாரதம் என்ற நூலிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது பாண்டவர் மற்றும் கௌரவர் கதையைப்பற்றி கூறுவது. பாரதப் போரில் பதினேழாம் நாள் அருச்சுனன் விடுத்த அம்பு கர்ணன் மார்பில் பாய அவன் குற்றுயிராகி விழுகிறான். அதனைக் கூறுகிறது இப்பாடல். விசயன் விடுத்த அம்பு கர்ணனின் மார்பில் குறி தவறாது தைத்தது. அதனால் அவன் குற்றுயிராகி விழுந்தான். அம்பு குறி தவறாது தைத்தது என்பதைச் சொல்ல வந்த வில்லிப் புத்தூரார், நடுவுநிலை பிறழாத சான்றோர் சொல் எவ்வாறு சிறிதும் பிசகாது உண்மையாகுமோ (பலிக்குமோ) அவ்வாறு கர்ணனின் மார்பைக் குத்தி ஊடுருவிச் சென்றது என்று கூறுகிற நயம் பாராட்டத் தக்கது. பண்டைய புலவர் பெருமக்கள் புறத்திலும் அறம்காட்டுவர் என்பதற்குச் சான்றாக, போர்க்களத்தில் விசயன் அம்புபட்டுக் கர்ணன் மடியும் காட்சியைச் சொல்லும் பொழுது, நடுநிலைமை பிறழாதவர் சொல் தப்பாமல் பலிக்கும் என்பதை உவமையாகக் கூறும் பான்மை குறிப்பிடத்தக்கது.

''உள்ளத்து உயர்வு'' என்ற தலைப்பில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து ''வெள்ளத் தனைய மலர் நீட்டம்...'' என்ற குறள் கொடுக்கப்பட்டுள்ளது. உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களைக் கண்ணால் காண முடியாது. செயல் மூலமாகத்தான் அறிய முடியும். இதனை விளக்குவதற்குக் கண்ணால் காணக்கூடிய நீர் மட்டத்தால் உயரும் மலர்களை உவமையாகக் கூறியுள்ள நயம் பாராட்டத்தக்கது. மனம் போல் வாழ்வு – என்னும் உலகறிந்த பழமொழியை எளிய உவமை மூலம் இக்குறள் விளக்குகிறது. பண்பு என்பது பொருள் தோன்றும் காலத்துத் தோன்றி, அது அழியும் காலத்து அழிவது. நீர்ப்பூக்கள் அனைத்தும் நீர் மட்டம் உயர்கிறபொழுது உயர்ந்தும், நீர்மட்டம் தாழ்கிறபொழுது தாழ்ந்தும் அழியும் பொழுது தாமும் அழியும். இத்தகைய சிறப்புடைய நீர்ப்பூவை மக்கள் உயர்வு தாழ்வுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது சிறப்பு.

''காதலியைப் பிரிந்த நளன்'' – இதில் நளவெண்பாவில் உள்ள ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் புகழேந்தி ஆவார். இது நளன் வரலாறு கூறும் பாடலாக அமைந்துள்ளது. நளன் நள்ளிரவுப் பொழுதில் தன் மனைவியை நடுக்காட்டில் தனியாக விட்டுவிட்டு வந்தான். காலைப் பொழுதில் கடற்கரை அருகே வரும்பொழுது நண்டுகள் ஓடி ஒளிந்தன. அவற்றைக் கண்டு அவன் பேசியதே இந்த நளவெண்பாப் பாடல். நளன் தமயந்தியைப் பிரிந்து சென்ற செயல் அவன் உள்ளத்தையும் மீறி நடந்த செயல் என்பதனை அவனே கூறுவதாக நாம் அறிய, கானகத்தே என்றும் காரிருள் என்றும் காதலியை என்றும் பல சொற்களைப் பயன்படுத்திக் கவிஞர் கூறிய நயம் பாராட்டிற் குரியது.

''முதலையின் பலம்'' – இதில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து ''நெடும் புனலுள் வெல்லும் முதலை...'' என்ற திருக்குறள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் விளக்க உரையும் இலக்கணமும் கொடுக்கப்பட்டுள்ளன. இக்குறட்பாவில், ஒவ்வொரு வரும் தம் இடத்திலிருந்தால் வலிமையுடையவராய் இருப்பர் என்பதனைக் கூற வந்த புலவர், முதலை தான் வாழும் நீரில் இருந்தால் வலிமை மிக்கது என்றும், நீரை விட்டு நீங்கினால் வலிமை குறைந்துவிடும் என்றும் வேறு கருத்தைக் கூறினார்; எனவே இது பிறிது மொழிதல் அணி ஆயிற்று.

''திங்களும் சான்றோரும்'' – இதில் சமண முனிவர்கள் பலரால் பாடப்பட்ட நாலடியாரிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. நீதி நூல்களில் நாலடியார் திருக்குறளுக்கு அடுத்தபடியாக கருதப் படுகிறது. சான்றோர்கள் உலக மக்களிடையே உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுவர்; உலக மக்களுக்கு நன்மையே செய்வர். இத்தகைய சிறப்புக்கு உரியவர்களை, உயர்வான வானத்தினை இருப்பிடமாகக் கொண்டதும் ஒளியால் மக்களுக்கு நன்மை செய்வதுமான சந்திரனோடு ஒப்பிட்டு அதனினும் சிறந்தோர் சான்றோர் எனக் கூறிய நயம் சிறப்புடையதாகும்.

''திருமாலுக்குச் சொல்மாலை'' – இதில் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடலை எழுதியவர் பொய்கையாழ்வார் ஆவார். ஆனால் நாலாயிர திவ்யப்பிரபந்தம் பன்னிரண்டு ஆழ்வார்களால் எழுதப் பட்ட தொகுப்பாகும். ''உலகமே விளக்கேற்றும் அகலாக, நீண்ட கடல்நீர் விளக்கு எரிக்கும் நெய்யாக வெப்பமிகுந்த கதிரவன் விளக்கு ஒளியாக, செம்மையான ஒளி பொருந்திய சக்கரப் படையுடைய திருமாலுக்கு, துன்பக் கடலிருந்து விடுபட வேண்டும் என விரும்பி இந்தப் பாமாலையைச் சூட்டினேன்'' என்று பொய்கையாழ்வார் பாடியுள்ளார்.

''அன்பும் வாழ்க்கையும்'' – இதில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து ''அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை...'' என்ற திருக்குறள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் விளக்க உரையும் இலக்கணமும் கொடுக்கப்பட்டுள்ளன. உலகில் இல்லாத, நிகழாத ஒன்றை உவமையாக வைத்துப் பாடுவது இல்பொருள் உவமைணியாம். இப்பாடலில் பாலை நிலத்தில் மரம் தளிர்ப்பது நிகழமுடியாத ஒன்று; அதிலும் வற்றிப்போன மரம் தளிர்ப்பது என்பது நிகழவே முடியாத செயல். இந்த இல்பொருளை உவமையாகக் கூறி அன்பு இல்லாது உயிர் இருக்க முடியாது என்பதைப் பெறவைக்கிறார்.

''செவிச் செல்வம்'' – இதில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து ''செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்...'' என்ற திருக்குறள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் விளக்க உரையும் இலக்கணமும் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்துச் செல்வங்களுள்ளும் செல்வமாகக் கருதப்படுவது கேள்வி அறிவாகிய செல்வமாகும். அக்கேள்விச் செல்வமே பிற செல்வங்கள் யாவற்றிலும் முதன்மை வாய்ந்தது. இக்இக்குறட்பா பயனில சொல்லாமை என்னும் அதி காரத்தில் உள்ளது. யாவரும், எப்பொழுதும் பயனற்ற சொற்களைக் களைந்து பயனுடைய சொற்களைக் கூறுக என்று சொல்லி வந்தவர் அப்பயன் சொல்லிலும் பொருளிலும் திகழ வேண்டும் என்பதற்காகச் சொற்பொருட் பின்வருநிலை அணியில் கூறுகிறார்.

''நோய் நாடி நோய்...'' – இக்குறட்பா 'மருந்து' அதிகாரத்தில் வந்துள்ளது. ''நாடி" என்னும் சொல் 'ஆராய்ந்து' என்னும் பொருள் தரும். மருத்துவம் என்பது ஒவ்வொரு நிலையிலும் ஆய்வுக்குரியது என்பதை உணர்த்த இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

''எங்கும் கொடிகள்'' – இதில் சீத்தலைச்சாத்தனார் எழுதிய மணிமேகலையிலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஐம்பெரும்காப்பியங்களுள் ஒன்று. இது சிலப்பதிகாரத்துடன் சேர்த்து இரட்டைக்காப்பியங்கள் என அழைக்கப்படுகிறது. காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரவிழா கொண்டாட ஏற்பாடு செய்க என முதுகுடிப் பிறந்தோன் முரசு அறைந்து செய்தி தெரிவிக்கின்றான். அப்பொழுது கொடிகள் கட்டி அழகுபடுத்துவது பற்றிக் கூறுவன இவ்வரிகள்.

கோவலன் – மாதவி மகளாய்த் தோன்றிய மணிமேகலையின் துறவு பற்றிக் கூறுவது. புத்த சமயக் கருத்துகளை விளக்குகின்றது. பரத்தையொழிப்பு, மதுவொழிப்பு, பசியொழிப்பு, சாதியொழிப்பு – என்ற சீர்திருத்தக் கருத்துகளைக் கூறுகின்றது. இந்நூலில் விழாவறை காதை முதலாக, பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை இறுதியாக முப்பது காதைகள் உள்ளன.

''பெண்ணும் வாழையும்'' – இதில் பதின் கவனகத்தில் பொழிந்த பாமழை என்ற நூலிலிருந்து பெ. ராமையா எழுதிய ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. பதின் கவனகம் என்பது பத்து வகையான

செய்திகளை நினைவில் கொள்பவர் என்று விளக்கப்பட்டுள்ளது. தலை வாருதல், பூச்சூடுதல், தண்டை அணிதல், விருந்தினரை உபசரித்தல், மகப்பேறு ஆகிய பெண்களுக்குரிய இயல்புகளை வாழையோடு பொருத்திக் காட்டிய கற்பனை நயம் போற்றுதற்குரியது.

"மெய்ப் பொருள்" இதில் சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்திலிருந்து ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது திருத்தொண்டர் புராணம் எனவும் அழைக்கப்படுகிறது. மெய்ப்பொருளார் திருக்கோவிலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னன். சிவபெருமானையும் சிவனடியார்களையும் துதிப்பவர். வீரம் ஈரம் மிக்கவர். இவர் மீது பக்கத்து நாட்டு மன்னன் முத்தநாதன் பொறாமையும், பகையும் கொண்டான். அவரோடு போரிட்டுத் தோற்றான். சிவனடியார் போல வேடமிட்டு வஞ்சனையால் அவரைக் கொன்றான். அந்நிகழ்ச்சியைக் கூறும் பாடல்.

"பெரியவை எவை ?" – இதில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலிருந்து "காலத்தினால் செய்த நன்றி...", "நிலையின் திரியா..." மற்றும் "பயன் தூக்கார் செய்த உதவி..." என்ற 3 குறள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் விளக்க உரைகளும் இலக்கணமும் கொடுக்கப் பட்டுள்ளன.

முதல் குறள் – நிலம் அதற்கு உரிய பருவத்தில் மட்டுமே விளைச்சலைத் தந்து பயன் கொடுக்கும். நமக்குத் தேவையான காலத்தில் அது விளையாது. எனவே நமக்குத் தேவையான காலத்தில் ஒருவர் உதவி / நன்மை செய்வாராயின் அது இந்நிலவுலகத்தை விடப் பெரியது என்று கூறிய நயம் பாராட்டிற்குரியது.

இரண்டாவது குறள் கடல் நமக்கு உதவுவது பயன் கருதியே. எவ்வாறெனில் மழை பெய்வதற்குத் தன் நீரைத் தந்து உதவுகிறது. தான் கொடுத்த நீர் மழை நீராகவும், ஆற்று நீராகவும் தன்னிடமே மீண்டும் வந்து சேருகிறது. அதனால் கடல் செய்யும் உதவி பயன் கருதியதாகிறது. எனவே பயன் கருதாது ஒருவர் உதவி செய்தால் அது கடலை விடப் பெரியது என்று குறள் காட்டும் நயம் போற்றத்தக்கது.

மூன்றாவது குறள் மலையானது என்றும் மாறாத தன்மை உடையது. ஆனால் மனிதனோ மாறும் தன்மை உடையவன். மாறும் தன்மையை இயல்பாகக் கொண்ட மனிதன் தன் நிலையில் திரியாது. அடக்கமாக இருப்பானேல் அவன் மலையை விட உயர்வானவன் என்று கூறும் நயம் போற்றத்தக்கது.

**முடிவுரை**

இந்த பல்லூடகத் தொகுப்பில் தமிழ் பாடல்களை மிக எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் நீதிநெறிப் பாடல், துதிப்பாடல், தமிழ் இனிமை கூறும் பாடல் என்று அனைத்து வகைகளிலும் பாடல்கள் கலந்து கொடுக்கப்பட்டுள்ளன. நீதி நெறி பாடல்களில் திருக்குறள் அதி முக்கியமாக இடம் பெற்றுள்ளது. கம்பராமாயணம், வில்லி பாரதம் மற்றும் கலிங்கப் போர் ஆணீயவற்றி லிருந்தும் பாடல்கள் விளக்கப்பட்டுள்ளன. இதில் திருப்புதல் பயிற்சிகள் மூன்று தொகுப்புகளாக கொடுக்கப்பட்டுள்ளன. இதில் பாடல் நயம் கண்டறிவதற்காக ஒலி, காட்சி, இலக்கணம், அருஞ்சொற்பொருள், பொழிப்புரை, உரைநடை வடிவம் என்று பலவகையான இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.